**அக்டோபர்: 17**

## நம் ஆண்டவர் சிலுவையில் பேசிய கடைசி வார்த்தை - ஒப்புவிப்பு

அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி நேரமாயிருந்தது, ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று. சூரியன் இருளடைந்தது, தேவாலயத்தின் திரைச்சீலை நடுவில் இரண்டாகக்கிழிந்தது. இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார், இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார். நூற்றுக்கு அதிபதி சம்பவித்ததைக்கண்டு: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினான். இந்தக் காட்சியைப் பார்க்கும்படி கூடிவந்திருந்த ஜனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள்.
லூக்கா 23:44-48
அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்.
எபிரேயர் 9:13-15




கெத்செமனே தோட்டத்தில் ஆரம்பித்த சிலுவை பயணம் கொல்கொதா மலையில் சிலுவை மரத்தில் நம் ஆண்டவர் பேசிய இந்த 7 வது வார்த்தையில் முடிந்தது. அவர் "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என சொல்லி தம்முடைய ஜீவனை நம்முடைய பாவத்தின் பரிகாரபலியாக அர்பணித்தார். ஆகவே தான் அதுவரை தேவாலயத்தில் மகாபரிசுத்த ஸ்தலமாகிய தேவபிரஸனத்திற்கு மிருகங்களின் பலியோடு பிரதான ஆசாரியன் மட்டுமே செல்லகூடிய இடத்தில் இருந்த திரை கிழிந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தாலே எல்லாரும் போக வழிவகுத்தது. இதை தான் பவுலடிகளார் எபிரேயருக்கு எழுதிய கடிதத்தில் சாதாரண மிருகங்களின் ஜீவனை (ரத்தமாக) பாவபலியாக தந்தால் நம் பாவத்தை மூட முடியுமென்றால் , ஜீவனுள்ள பரிசுத்த தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவன் (இரத்தம்) நம்முடைய பாவங்களை முற்றிலும் கழுவி நம்மை சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம். ஆகவே சின்ன செல்லங்களா உங்களுக்கு பயம் திகில் வரும் போதெல்லாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை விசுவாசத்தால் பயன்படுத்தி பாருங்கள். உள்ளத்திலிருந்து நம்பிக்கையோடு சொல்லி பாருங்கள். நீங்களும் அதிசயத்தை காண்பீர்கள். ஆமென்.

நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! எபிரேயர் 9:14

### ஜெபம்

மகிமையான பரலோக தந்தையே,
எனக்காக நீர் அனுப்பி தந்த பிரதான ஆசாரியரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் பரிகாரபலிக்காக நன்றி. இதோ இனிமேல் அவருக்காக வாழ ஜீவபலியாக என்னை ஒப்புகொடுத்து, இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

